## கடவுளுக்கும் பக்தர்களுக்கும் இடையில்...



மதவெறி வெறுப்புப் பிரச்சாரத்தின் மூலம் கலவரத்துக்குத் திட்டமிடும் வேலைதான் 'திருப்பதி லட்டு' விவகாரத்தில் நடக்கிறது, எனச் சமூக வலைதளங்களில் கருத்துகள் பகிரப்பட்டு வருகின்றன. மக்களின் மத நம்பிக்கைகள் மிக எளிமையானவை, என்பதைக் குறிப்பிடும் வகையில் எழுத்தாளர் ஆர்.பத்ரி தனது முகநூலில் வெளியிட்டுள்ள பதிவு இது.

பவன் கல்யாண், படிகளைக் கழுவிக் கொண்டிருந்த அதே வேளையில்தான் முப்பது லட்சம் லட்டுகளை வாங்கிச் சென்று இருக்கிறார்கள், ஏழுமலையானின் பக்தர்கள்.

ஸ்ரீரங்கம் அரங்கநாதர் சன்னிதியில் வீற்றிருக்கும் 'சுரதானி' எனும் துலுக்க நாச்சியாருக்குப் படைக்கும் ரொட்டி, வெண்ணெயைப் பேதமின்றி ஏற்றுக்கொள்கிறார் பள்ளிகொண்டப் பெருமாள்.

பகல்பத்து வழிபாட்டில், அவருக்கு லுங்கி உடுத்தி வழிபடுகிறார்கள் பக்தர்கள்.

சரபோஜி மன்னர் கட்டிய தர்காவில், நாகூர் ஆண்டவர் பூக்களோடும் பூஜை பொருட்களோடும் அலங்கரிக்கப்பட்டிருக்கும் 'செட்டிப் பல்லக்கில்' தான் இன்றளவும் பவனி வருகிறார்.

சபரிமலையில் வீற்றிருக்கும் இஸ்லாமிய 'வாவர் சன்னிதி' யில் மிளகுக் காணிக்கையை அளித்த பிறகே, ஐயப்பனைக் காணச் செல்கிறார்கள் அவரது பக்தர்கள்.

'திப்புவின் மானியம் இல்லாத கோவிலும் இல்லை. நாயக்க மன்னர்களின் கொடையில்லாத பள்ளிவாசல்களும் இல்லை' என்பதே நமது மண்ணின் சிறப்பு.

கடவுளுக்கும் பக்தர்களுக்கும் இடையில் கட்டப் பஞ்சாயத்து செய்ய, யாரும் இங்கே சொம்பைத் தூக்கிட்டு வரத் தேவையில்லை." என்கிற அவரது பதிவு அதிகம் பகிரப்பட்டு வருகிறது.

## :.ப்ளாஷ்பேக்





கரிகால சோழன்

### கொள்கை வீரர் கோட்டூரார் தந்த நிதி!

கீழத் தஞ்சை மாவட்ட தி.மு.க. நிதி அளிப்புப் பொதுக்கூட்டம், மன்னார்குடியில் 20/03/1993 அன்று நடைபெற்றது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வருகை தந்து சிறப்புரை ஆற்றினார். அப்போது, கோட்டூர் ஒன்றியக் கழகச் செயலாளராக இருந்த என்னுடைய தந்தை, அ.இராஜசேகரன் அவர்கள் தலைவர் கலைஞரைச் சந்தித்து நிதி வழங்கினார். கழகமே மூச்செ‌ன வாழ்ந்த என் தந்தை மறைவெய்தியபோது, 'கொள்கை வீரன் கோட்டூர் அ.இராஜசேகரன்' என்று தலைவர் கலைஞர் எழுதிய அஞ்சலிக் குறிப்புதான் என்னைக் கழகத்தின் மீது பற்றுக்கொள்ள செய்திருக்கிறது.

**– இரா.கரிகாற் சோழன், முன்னாள் துணை அமைப்பாளர், மாணவர் அணி, கோட்டூர், திருவாரூர் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### நங்கவரம் எழுச்சி!

1957-ஆம் ஆண்டு குளித்தலை, நங்கவரம் விவசாயிகள் போராட்டம், கலைஞர் தலைமையில் தீவிரமடைந்தது. கழகத்தின் ஏடான 'நம்நாடு' பொதுமக்களை அணி திரட்டியது. "நாட்டினரே காணீர், நியாயம் தர வாரீர்" என 23.8.1957 அன்று நடைபெற்ற அறப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்தது. அதற்கு முதல் நாள் விவசாயிகள் கலந்துகொண்ட மாபெரும் அணிவகுப்பும், கலைஞர் தலைமையில் அண்ணா கலந்துகொண்ட பொதுக்கூட்டமும் நடைபெற்றன.

## சீரணி ⟹ இளைஞர் அணி 30

**ந.வினோத்குமார்**

தி.மு.கழகத்தால் இளைஞர்களும், இளைஞர்களால் கழகமும், இந்த இருவரால் தமிழ்ச் சமூகமும் கண்ட மேம்பாடு குறித்துப் பேசும் தொடர் 'சீரணி முதல் இளைஞர் அணி வரை'...

ஓவியம் : ரவி பேலட்



## சீரணியின் மறுவாழ்வு நிதி!

*1971-இல் முத்தமிழறிஞர் கலைஞரின் 48-வது பிறந்த நாளில் இன்னொரு மகத்தான திட்டமும் உதயமானது. அதுதான் '**பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம்**'. அதே ஆண்டில்தான் அவருக்கு சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது. இந்த இரண்டு நிகழ்வுகளையும் கொண்டாடும் வகையில், சீரணி சார்பாக சென்னை, கலைவாணர் அரங்கில் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வுத் திட்டத்துக்கான நிதியளிப்பும், டாக்டர் பட்டம் பெற்ற கலைஞருக்குப் பாராட்டும் நடைபெற்றன. அதுதொடர்பான செய்தி 1971-ஆம் ஆண்டு அக்டோபர் 5-ஆம் தேதியிட்ட 'நம்நாடு' இதழில் விரிவாகப் பதிவாகியுள்ளது.*

*இந்த விழாவுக்கு சீரணி அமைச்சர் என்.வி.நடராசன் தலைமை தாங்கினார். சென்னை மாவட்ட சீரணித் தலைவர் நீல.நாராயணன் தன்னுடைய வரவேற்புரையில், "இந்த நாட்டின் முன்னேற்றத்திற்கான பல நல்ல காரியங்களைச் செய்த இந்தச் சீரணி தன்னுடைய ஊழியத்தையும் பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்கு அளிக்க முன்வந்திருக்கிறது. நாட்டு மக்களின் நலிவு தீர்ப்பதற்காக, இந்த நாட்டின் மறுமலர்ச்சிக்காக சீரணி, தன்னுடைய உயிரைத் தரவும் தயாராயிருக்கிறது" என்றார்.*

> **"பிச்சைக்காரர் தொல்லை ஒழிக்கப்பட வேண்டும் என்று நாம் கூறுவதற்கும், பிச்சைக்காரர் தொல்லை ஒழிக்கப்பட வேண்டும் என்று பிறர் கூறுவதற்கும் வேறுபாடு உண்டு.**

### சேலத்தில் சீரணி அரங்கம்!

சென்னையில், சீரணியினரால் சீரணி அரங்கம் கட்டப்பட்டது. அதற்குப் பிறகு, அது போன்ற அரங்கம் சேலத்தில்தான் அமைக்கப்பட்டது. அந்த அரங்கத்துக்கு 'ஏ.கோவிந்தசாமி நினைவு சீரணியின் திறந்தவெளி அரங்கம்' என்று பெயர் சூட்டப்பட்டது. இதுதொடர்பாக, 1971-ஆம் ஆண்டு ஜூன் 13 மற்றும் 19-ஆம் தேதிகளில் 'நம்நாடு' இதழில் செய்திகள் வெளியாகியுள்ளன.

சேலம், சீரணி அரங்கத்தை அமைச்சர் செ.மாதவன் திறந்து வைத்திருக்கிறார். அந்தத் திறப்பு விழாவுக்கு, சேலம் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் வெங்கடாசலம் தலைமை தாங்கியிருக்கிறார். 'ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில், பொதுமக்களுக்குப் பயன்படுகிற வகையில் நாடகம், நிகழ்ச்சிகள் போன்றவற்றை நடத்த, இந்த கலை அரங்கம் பயன்படும்' என்று அப்போது சொல்லப்பட்டது.

*என்.வி.நடராசன் தனது தலைமை உரையில், "ஏழையென்றும், அடிமையென்றும் எவனுமில்லை, ஜாதியில்லை என்ற விவாதத்தில் மக்களிடையே சமதர்மம் பரவிட, இந்த அமைப்பு ஆற்றிய பணி மகத்தானதாகும்" என்றார்.*

*பிறகு, பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்கென சீரணியினரால் வசூலிக்கப்பட்ட ரூ.44 ஆயிரத்தை 444 பண முடிப்பை அமைச்சர் நடராசன் முதலமைச்சர் கலைஞரிடம் அளித்தார். பின்னர் பேசிய முதலமைச்சர் கூறியதாவது:*

*"பிச்சைக்காரர் தொல்லை ஒழிக்கப்பட வேண்டும் என்று நாம் கூறுவதற்கும், பிச்சைக்காரர் தொல்லை ஒழிக்கப்பட வேண்டும் என்று பிறர் கூறுவதற்கும் வேறுபாடு உண்டு. காரிலே போகின்றபோது பிச்சைக்காரர்கள் கை நீட்டினால், 'இந்தத் தொல்லை தீராதா' என்று சிலர் முணுமுணுக்கிறார்கள். அப்படியெல்லாம் அல்ல, நமது அரசின் சிந்தனை.'பிச்சைக்காரர் படும் தொல்லை தீராதா' என்று அரசு நினைக்கிறது. அவர்களின் அந்தத் தொல்லையை நீக்கத்தான் பாடுபடுகிறது."*

**...வெற்றிநடை போடும்.**

## பொய்ப்பெட்டி 30

**கோவி.லெனின்**

"கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்..."

## பெண்களின் பாதுகாப்பில் அ.தி.மு.க.வுக்கு அக்கறையா?




*தி.மு.க ஆட்சியில் பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்று குற்றம்சாட்டி அ.தி.மு.க சார்பில், வளர்மதி தலைமையில் போராட்டம் நடத்தியிருக்கிறார்களே?*

*எந்த அ.தி.மு.க? பொள்ளாச்சியில் ஓர் இளம் பெண் அலறித் துடித்து, 'அய்யோ.. பெல்ட்டால அடிக்காதீங்கண்ணா' என்று கதறிய நிலையிலும், அவரையும் அவரைப் போல பல பெண்களையும் பாலியல் கொடுமைக்குள்ளாக்கி வீடியோ எடுத்த குற்றவாளிகளை சட்டத்திலிருந்து காப்பாற்றிய அந்த அ.தி.மு.க.வா? ஜெயலலிதாவின் ஊழலுக்காக சிறப்பு நீதிமன்றம் தண்டனைத் தீர்ப்பு வழங்கியபோது கண்டனப் போராட்டம் என்ற பெயரில், கோவை வேளாண் பல்கலைக் கழகத்தினர் சுற்றுலா வந்த பேருந்தை, தர்மபுரி இலக்கியம்பட்டியில் தீ வைத்துக் கொளுத்தி கோகிலவாணி, ஹேமலதா, காயத்ரி ஆகிய 3 மாணவிகளைத் துடிதுடிக்க எரித்துக் கொன்ற ஜெயலலிதா தலைமையிலான அந்த அ.தி.மு.க.வா? இந்தக் கொலை வழக்கில் தண்டிக்கப்பட்ட அ.தி.மு.க. நிர்வாகிகளை சிறையிலிருந்து முழுமையாக விடுதலை செய்த எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அந்த அ.தி.மு.க.வா?*

*தனது உடன்பிறவா சகோதரியின் குடும்பத்துக்குள் நடந்த பிரச்சினைக்காக இளம்பெண் செரீனா (எ) ஜனனி மீது கஞ்சா வழக்குப் போட்டு கைது செய்து துன்புறுத்தி, நீதிமன்றத்தின் கடும் கண்டனத்துக்குள்ளான ஜெயலலிதா காலத்து அ.தி.மு.க.வா? ஐ.ஏ.எஸ்.அதிகாரி சந்திரலேகா முகத்தில் ஆசிட் வீசி கொடூரமாக சிதைத்த அதே அ.தி.மு.க.வா?*

*தனது ஆட்சிக் காலத்தில் வாச்சாத்தியில் பெண்களைப் பல்வேறு சித்ரவதைகளுக்கு உள்ளாக்கிய அந்த அ.தி.மு.க.வா? சிதம்பரம் அண்ணாமலை நகர் காவல் நிலையத்தில் பத்மினி என்ற பெண்மணியை அவரது கணவரின் கண்ணெதிரிலேயே சீரழித்த கேடு கெட்ட ஆட்சி நடத்திய அ.தி.மு.க.வா? சந்தனக்காடு வீரப்பன் தேடுதல் வேட்டை என்ற பெயரில் மலைகிராமப் பெண்களை 'ஒர்க் ஷாப்' சித்திரவதைகளுக்கு உட்படுத்திய அந்த அ.தி.மு.க.வா?*

> **அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் போராட்டம் நடத்தியபோது நள்ளிரவில் அவர்களின் வீடுகளில் புகுந்து 'விபச்சார வழக்கு போடுவோம்' என்று மிரட்டிய அ.தி.மு.க.வா?**


*அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் போராட்டம் நடத்தியபோது நள்ளிரவில் அவர்களின் வீடுகளில் புகுந்து 'விபச்சார வழக்கு போடுவோம்' என்று மிரட்டிய அ.தி.மு.க.வா? அ.தி.மு.க எந்த லட்சணத்தில் போராட்டம் நடத்தியது? அதுவும் முன்பொரு முறை உயர்நீதிமன்றத்துக்கு வந்த சுப்பிரமணியசாமிக்கும் சந்திரலேகாவுக்கும் உலகம் 'கண்டிராத' வரவேற்பை அளித்த வளர்மதி தலைமையில்!*

**...வினா தொடரும்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

613

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131